சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 50 / 2016

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 17.11.2021 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : சுப்ரமணி | கிராமம் : |
| த/பெ : பெரியதம்பி | வட்டம் : |
| மதம் : | தொழில் : |
| ஜாதி : | வயது : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் 1வது மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.1

2) பிரேதபரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.2

3) இறப்புச் சான்றிதழ் அசல் - ம.சா.ஆ.3

4) இறுதிஅறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.4

5) மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.5

6) மோட்டார்வாகன ஆய்வறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ.6

7) மோட்டார்வாகன ஆய்வறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ.7

8) மோட்டார்வாகன ஆய்வறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ.8

9) வழக்கறிஞரின் அறிப்பு அலுவலகநகல் - ம.சா.ஆ.9

10) அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் - ம.சா.ஆ.10

11) வாரிசுச்சான்றிதழ் உண்மைநகல் - ம.சா.ஆ.11

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன மணிகண்டன் எனது மகன். மணிகண்டன் இறந்தபோது அவருக்கு வயது 19. மணிகண்டன் போர்வெல் கம்பெனிக்கு வேலைப் பார்த்துவந்தார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்திற்கு காரணம் இறந்துபோன மணிகண்டன் தான் என்று போலீஷார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால்சரிதான். மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து நடந்தது. அந்த இருசக்கர வாகனம் எனக்கு உரிமைப்பட்டதாகும். அந்த இருசக்கர வாகனத்திற்கு தற்சமயம் என்னிடம் பதிவுச்சான்றிதழ் இல்லை. அந்தஇருசக்கர வாகனம் பஜாஜ் சிடி 100 வகையைச்

சார்ந்தது. அந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை. இந்த விபத்து சம்பந்தமாக நான் போலீஷார்இடம் புகார் கொடுக்கவில்லை என்றால் நான் புகார் கொடுத்தேன் போலீஸார் வாங்க மறுத்துவிட்டார். தோகமலை காவல்நிலையத்தில் நானும் வேறு ஒருவரும் சென்றோம் என்னுடன் வந்தவர் காவல்நியைலத்தில் புகார் கொடுத்தார். பேருந்து ஓட்டுநர்தான் கவனக்குறைவாக பேருந்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்என்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் காவல் துணைக்கண்பாளருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த அறிவிப்பிற்கு பின்பு போலீஷார் என்னை விசாரிக்கவில்லை. அதன்பிறகு நானும் காவல்துறை சென்று ஏன் விசாரிக்கவில்லை என்ற கேட்கவில்லை. நான் கொடுத்த அறிவிப்பிற்கு பின்பு மேல் நடவடிக்கையாக தனிநபர் புகார் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல செய்யவில்லை. விபத்து சம்பந்தமாக தோகமலை போலீஷார் முறையான விசாரணை மேற்கொண்டு சரியான நபர் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்க என்றால்சரியல்ல. விபத்திற்கு அரசுப்பேருந்து எந்த விதத்திலும் பொறுப்பல்ல என்றால் அதனை நான் கடுமையாக மறுக்கிறேன். எனதுமகன் மணிகண்டன் சென்ற இருசக்கர வாகனமும் ரமேஷ் வந்த இருசக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டு அதன் பிறகு பேருந்து என்மகன் மீது ஏறி இறங்கியது. எனது மகன் விபத்திற்கு முன்பு தினமும் ரூ.500 சம்பாதித்து வந்தார்என்று வழக்கிற்கா க சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. எனதுமகன் மணிகண்டனுக்கு ஓட்டுநர்உரிமம் இல்லை. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சரியாக சாலை விதிகளை பின்பற்றாமல் எனதுமகன் கவனக்குறைவாக இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும் விபத்திற்கு அரசுப்பேருந்து எந்தவகையிலம் பொறுப்பல்ல என்றும் சொன்னால்சரியல்ல. இந்த வழக்கில் போலிஷார் விசாரணையின் படி 3 வாகனங்கள் சம்பந்தப்பட்டது என்றம் 3 வாகனங்களையும் இந்த வழக்கில் சேர்க்காததால் மனு குறைபாடுஉடையது என்றும் சொன்னால்சரியல்ல. நான்கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல மனு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. மனுதாரர்களாகிய நாங்கள் எனதுமகன் மணிகண்டனுக்கு வாரிசுதார்கள் இல்லை என்றும் அவரைச் சார்ந்தும் நாங்கள் இல்லை என்று ம் சொன்னால்சரியல்ல.

ஒம்/சுப்ரமணி

ஒம்/M.சண்முககனி,

சார்பு நீதிபதி,

குளித்தலை.